# கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி - 628 503
## லட்சுமி அம்மாள் நினைவு பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கி போட்டி - 2019

**கோவில்பட்டி மே 25, 2019** (சனிக்கிழமை) நடைபெறும் பதினொன்றாவது லட்சுமி அம்மாள் நினைவு கோப்பை அகில இந்திய ஹாக்கி போட்டி குறித்த செய்திகள்:

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

**போட்டியின் 10வது நாளான இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணியுடன் சென்னை ஐ.சி.எப். அணி மோதியது.**

**இதில் 6:2 என்ற கோல் கணக்கில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிப் பெற்றது.**

3-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் உமேஷ் ஒரு பீல்டு கோல் போட்டார்.
29-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் அப்கரன் சுதேவ் ஒரு பீல்டு கோல் போட்டார்.
36-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் மணிகாந்த் பெஜாவத் ஒரு பீல்டு கோல் போட்டார்.
40-வது நிமிடத்தில் சென்னை, ஐ.சி.எப். அணி வீரர் சஞ்சய் ஷால்ஷோ ஒரு பீல்டு கோல் போட்டார்.
47-வது நிமிடத்தில் சென்னை, ஐ.சி.எப். அணி வீரர் தனுஷ் ஒரு பீல்டு கோல் போட்டார்.
47-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் குஷா ஜெ பி கௌடா ஒரு பீல்டு கோல் போட்டார்.
52-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் குஷா ஜெ பி கௌடா ஒரு பீல்டு கோல் போட்டார்.
59-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் முகமது ரஹீல் மௌசின் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. ஷாகில் அகமது மற்றும் திரு. மல்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **மணிகாந்த் பெஜாவத்,** பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன், பெங்களூர்.
(Refer Photo - LASA2019_25052019_ Semi Final_1_Photo)

**2வது அரையிறுதிப் போட்டியில் மும்பை, ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணியுடன் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி மாலை 7.15 மணியளவில் மோதியது.**

**இதில் 6:5 என்ற கோல் கணக்கில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிப் பெற்றது.**

**(முதலில் 2:2 என்ற கோல் கணக்கில் மும்பை, ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணியும் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணியும் சமநிலைப் பெற்றது. பின்பு ஸூட்அவுட் முறையில் 4:3 என்ற கோல் கணக்கில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வெற்றி பெற்று பெற்றது.)**

18-வது நிமிடத்தில் மும்பை, ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் இல்தர் இஸ்ராட் ஒரு பீல்டு கோல் போட்டார்.
27-வது நிமிடத்தில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் மயாங் ஜோம்ஸ் ஒரு பீல்டு கோல் போட்டார்.
33-வது நிமிடத்தில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் ராஜூபால் ஒரு பீல்டு கோல் போட்டார்.
58-வது நிமிடத்தில் மும்பை, ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் திம்மன்னா ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. ராஜ்குமார் ஜா மற்றும் திரு. கீர்த்தி முத்தப்பா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **ரஞ்சன் ஐயப்பா,** சவுத் சென்ட்ரல் ரயில்வே, செகந்திரபாத்
(Refer Photo - LASA2019_25052019_ Semi Final_2_Photo)

**நாளை 26.05.2019 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் இறுதிப் போட்டி:**

| வ.எண். | நேரம் | அணி - 1 | அணி - 2 |
|---|---|---|---|
| 1. | 7.15 p.m. | பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன், பெங்களூர் | சவுத் சென்ட்ரல் ரயில்வே, செகந்திரபாத |

**நாளை 26.05.2019 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் மூன்று மற்றும் நான்காம் இடங்களுக்கான போட்டி:**

| வ.எண். | நேரம் | அணி - 1 | அணி - 2 |
|---|---|---|---|
| 1. | 5.30 p.m. | ஐ.சி.எப்., சென்னை | ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி, மும்பை. |

**பரிசளிப்பு :**

26.05.2019 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு

முதல் பரிசாக - ரூபாய் 1,00,000/- மற்றும் கோப்பையும்
இரண்டாம் பரிசாக - ரூபாய் 75,000/- மற்றும் கோப்பையும்
மூன்றாம் பரிசாக - ரூபாய் 50,000/- மற்றும் கோப்பையும்
நான்காம் பரிசாக - ரூபாய் 30,000/- மற்றும் கோப்பையும் வழங்கப்படுகிறது.

மேலும் நடுவர்களால் தேர்வு செய்யப்படும் சிறந்த முன்கள ஆட்டக்காரர், பின்கள ஆட்டக்காரர், நடுகள ஆட்டக்காரர் மற்றும் சிறந்த தடுப்பாளர் விருதுகளும் தனி நபர்களுக்கு வழங்கப்பட உள்ளன.